பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

31 07 2024 6 45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. காவிரி டெல்டா பாசனத்திற்காக கல்லணையிலிருந்து இன்று காலை தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.
2. வடகிழக்கு பருவமழைக்கு முன்பாக வெள்ளத்தடுப்பு பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளை மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் கேட்டுக் கொண்டுள்ளார்.
3. வேளாண்துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளுக்கும் நிதி ஒதுக்கீடு பலமடங்கு அதிகரித்திருப்பதாக நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
4. கேரள மாநிலம் வயநாடு நிலச்சரிவில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 123-ஆக அதிகரித்துள்ளது. மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.
5. இலங்கைக்கு எதிரான மூன்றாவது மற்றும் கடைசி டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் சூப்பர் ஓவர் முறையில் இந்தியா வெற்றிபெற்றது.

<u>*----- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

காவிரி டெல்டா மாவட்டங்களின் பாசனத்திற்காக கல்லணையிலிருந்து இன்று காலை தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

மேட்டூர் அணையிலிருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் திருச்சி முக்கொம்பு அணையை வந்தடைந்தது.

இதையடுத்து இன்று காலை ஒன்பது மணி அளவில் கல்லணை திறக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<u>*( வாய்ஸ்பைட் - நந்தகோபால் ) ----36 செகண்ட்*</u>

இதனிடையே மேட்டூர் அணை நிரம்பியதை அடுத்து அணையின் பாதுகாப்பு கருதி அணையின் 16 கண் மதகுகள் வழியாக தண்ணீர் திறந்துவிடப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<u>*( வாய்ஸ்பைட் - விஜயகுமார் ) ---- 40 செகண்ட்*</u>

இந்நிலையில் காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் மீண்டும் கன மழை பெய்து வருவதால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் இன்று காலை நிலவரப்படி 90 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - தண்டபாணி ) ----- செகண்ட்*

[]<<<>>>[]

வடகிழக்கு பருவமழைக்கு முன்பாக வெள்ளத்தடுப்பு பணிகளை விரைந்து முடிக்க வேண்டுமென்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருக் அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.

சென்னையில் நேற்று 13 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வெள்ளத்தடுப்புப் பணிகள் குறித்து அவர் ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் நடைபெற்று வரும் இந்த பணிகள் மற்றும் தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்குமாறு அப்போது அவர் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் ஏரிகள் புனரமைப்புப் பணிகளையும் விரைவாக முடிக்க வேண்டுமென்று அவர் அறிவுறுத்தியுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

[]<<<>>>[]

பருவமழைக் காலங்களில் வீணாக கடலில் கலக்கும் நீரை பாதுகாக்கும் திட்டம் குறித்து குறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்யுமாறு மாநில அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான மனுவை விசாரித்த பொறுப்பு தலைமை நீதிபதி திரு கிருஷ்ணகுமார், நீதிபதி திரு குமரேஷ்பாபு ஆகியோரைக் கொண்ட அமர்வு, சென்னை மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதும் பருவமழைக் காலங்களில் வீணாகும் நீரை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம் என அரசுக்கு ஆலோசனை தெரிவித்தது.

எதிர்கால நலனை கருத்தில் கொண்டு இது குறித்த விரிவான அறிக்கையை அரசு தாக்கல் செய்ய வேண்டுமென்றும் அவர்கள் உத்தரவிடட்னர்.

[]<<<>>>[]

கேரள மாநிலம் வயநாட்டில் நேற்று நேரிட்ட நிலச்சரிவில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 123-ஆக அதிகரித்துள்ளது.

இந்த சம்பவத்தில் காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பெய்த கனமழை காரணமாக வயநாடு அருகே உள்ள மூன்று கிராமங்கள் முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளன.,

மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

தேசிய பேரிடர் மீட்புப்படையினருடன், மாநில மீட்புப் படையினரும், விமானப்படையின் ஹெலிகாப்டர்களும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

நிலச்சரிவில் சிக்கியிருப்பவர்களை கண்டறிவதற்காக மோப்ப நாய்களும் வரவழைக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே வயநாடு அருகே உள்ள சூரல்மலா என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்புப் பணிகளை விரைவுபடுத்துமாறு அதிகாரிகளுக்கு கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயன் அறிவுறுத்தியுள்ளார்.

அங்கு நடைபெற்று வரும் மீட்புப் பணிகள் குறித்து திருவனந்தபுரத்தில் அவர் உயர்நிலைக் குழுவினருடன் ஆலோசனை நடத்தினார்.

வயநாடு நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அனைத்து உதவிகளும் அளிக்கப்படும் என்று மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு நித்தியானந்தராய் நேற்று மாநிலங்களவையில் உறுதியளித்தார்.

[]<<<>>>[]

வேளாண்துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளுக்கும் நிதி ஒதுக்கீடு பலமடங்கு அதிகரித்திருப்பதாக நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் நேற்று மத்திய பட்ஜெட் மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய அவர், நடப்பு நிதியாண்டில் வருவாய் பற்றாக்குறைக்கும், நிதி பற்றாக்குறைக்கும் இடையேயான விகிதம் 36 சதவீதமாக குறையும் என்று கூறினார்.

வேளாண்துறை மற்றும் விவசாயிகளின் நல னுக்காக 2013-14-ஆம் நிதி ஆண்டில் 21 ஆயிரத்து தொள்ளாயிரத்து 34 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யபபெட்ட நிலையில். தற்போது ஒரு லட்சத்து 23 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும், இது ஐந்து மடங்கு கூடுதலாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரதமரின் விவசாயிகள் நலநிதி திட்டத்தின் கீழ் 11 கோடி பேருக்கு மூன்று லட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

கடந்த பத்து ஆண்டுகளில் 12 கோடியே 50 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருப்பதாகவும், இது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு ஏற்படுத்திய வேலைவாய்ப்பைவிட இரண்டு கோடியே 30 லட்சம் அதிகம் என்றும் கூறினார்.

வேலைவாய்ப்புக்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப் பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நடப்பு ஆண்டில் ஊரக மேம்பாடு, நகர்புற வளர்ச்சி, சுகாதாரம் மற்றும் சமூக நலத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்திருப்பதையும் புள்ளி விவரங்களுடன் அவர் எடுத்துரைத்தார்.

மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம் காட்டப்படுவதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்திருந்த குற்றசாட்டை திருமதி நிர்மலாக சீதாராமன் திட்டவட்டமாக மறுத்தார்.

நிதி பற்றாக்குறையை அடுத்த நிதி ஆண்டில் நான்கு புள்ளி ஐந்து சதவீதத்துக்கும் கீழ் கொண்டுவர மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாகவும், உலக அளவில் வேகமான பொருளாதார வளர்ச்சியை நோக்கி இந்தியா சென்று கொண்டிருப்பதாகவும திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

[]<<<>>>[]

2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக உருவாவதில் பிரதமரின் கதிசக்தி திட்டம் முக்கிய பங்கு வகிக்கும் என்று மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற வளர்ச்சியடைந்த பாரதத்தை நோக்கிய பயணம் என்ற பட்ஜெட்டுக்கு பிந்தைய கருத்தரங்கில் பேசிய அவர், 30 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்தை இந்தியா எளிதில் எட்டும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

மத்திய அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக மக்களுக்கு சிறந்த எதிர்காலம் உருவாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

நான்கு நாடுகளுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் காரணமாக சுகாதாரம், கல்வி, உள்கட்டமைப்பு மற்றும் டிஜிட்டல் துறைகளில் மிகப்பெரும் வளர்ச்சியை எட்டுவதற்கு அரசு உறுதிபூண்டுள்ளதாகவும் திரு பியூஷ்கோயல் கூறினார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் ஒரு சில பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

நீலகிரி மற்றும் கோவையின் ஒரு சில பகுதிகளில் மிக கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

*( சவுண்ட்பைட — செ க )  ---- 30 செகண்ட்*

**[]<<<>>>[]**

லெபனான் தலைநகர் **Beirut**-ல் இஸ்ரேல் படையினர் நேற்று வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

**[]<<<>>>[]**

பாலஸ்தீனத்தின் தெற்கு காஸா பகுதியில் கடந்த ஒருவார காலமாக நடத்தப்பட்ட தாக்குதல் நிறுத்தப்பட்டிருப்பதாக இஸ்ரேல் ராணுவம் அறிவித்துள்ள நிலையில் ஆயிரக்கணக்கான பாலஸ்தீனர்கள் வீடு திரும்பியுள்ளனர்.

**[]<<<>>>[]**

வியட்நாம் பிரதமர் திரு **Pham minh chinh** மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக நேற்று புதுதில்லி வந்தடைந்தார்.

**[]<<<>>>[]**

பிரதமரின் ஜன்தன் திட்டத்தின்கீழ் இம்மாதம் பத்தாம் தேதி வரை 52 கோடியே 74 லட்சம் வங்கிக் கணக்குகளில் இரண்டு லட்சத்து 31 ஆயிரத்து தொள்ளாயித்து ஒன்பது கோடி ரூபாய் செலுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீரில் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் ஓ பி சி இடஒதுக்கீடு குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திரு ஜானக்ராஜ் கோட்-வால் நியமிக்கப்பட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீர் அமர்நாத் குகைக் கோவிலில் உள்ள பனிலிங்கத்தை இந்த ஆண்டு இதுவரை ஆறு லட்சத்து 66 ஆயிரம் பேர் தரிசனம் செய்துள்ளனர்.

**[]<<<>>>[]**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் எட்டு கோடியே 78 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாநில அமைச்சர் திரு தா மோ அன்பரசன் நேற்று வழங்கினார்.

**[]<<<>>>[]**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில அமைச்சர் திரு செஞ்சி மஸ்தான் புதிய பேரூராட்சி கட்டிடங்களை திறந்து வைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

**[]<<<>>>[]**

சென்னை மாநகராட்சிக்கு உட்பட். பகுதிகளில் கடந்த எட்டு நாட்களாக நடைபெற்ற தீவிர தூய்மை பணியின்போது மூவாயிரத்து 358 மெட்ரிக் டன் குப்பைகள் அகற்றப்பட்டுள்ளதாக மாநாகராட்சி தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

இலங்கைக்கு எதிரான மூன்றாவது மற்றும் கடைசி டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா சூப்பர் ஓவரில் வெற்றிபெற்றது.

இலங்கையின் பல்லேகலாவில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஒன்பது விக்கெட் இழப்புக்கு 137 ரன் எடுத்தது.

138 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இலங்கை அணி 20 ஓவரில் எட்டு விக்கெட்களை இழந்து 137 ரன் எடுத்ததால் ஆட்டம் டை-யில் முடிந்தது.

இதையடுத்து சூப்பர் ஓவர் முறையில் இலங்கை அணி இரண்டு ரன் மட்டுமே எடுத்தது.

இந்திய கேப்டன் சூரியகுமார் யாதவ் முதல் பந்திலேயே நான்கு ரன் அடித்து வெற்றிக்கு வழிவகுத்தார்.

இதன்மூலம் மூன்றுக்கு – பூஜ்ஜியம் என்ற கணக்கில் இந்தியா தொடரை கைப்பற்றியது.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் ஆடவர் இரட்டையர் பேட்மிண்டன் பிரிவில் இந்தியாவின் ஷிராக் ஷெட்டி – சாத்விக் சாய்ராஜ் ரங்கிரெட்டி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.